[1988 ஜனவரி 27

(இ) எல்லை காந்தி திரு. கான் அப்துல் கபார்கான் மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லை காந்தி என அன்புடன் அழைக்கப்பட்ட திரு. கான் அப்துல் கபார்கான் அவர்கள் 20—1—1988 ஆம் தேதியன்று மறைந்தமை குறித்து இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது காலத்தில் வாழ்ந்த மாபெரும் தலைவர்களில் ஒருவ ராவார். இவர் மகாத்மா காந்தி அவர்களுடன் தோளுடன் தோள் சேர்ந்து இந்தியத் துணைக் கண்டத்தின் சுதந்திரப் போராட்டத்திற்காகப் போராடிய புகழ் பெற்ற வீரர்களில் ஒருவ ராவார். தாம் மேற்கொண்ட சுதந்திரப் போராட்டத்தின் காரணமாக தமது வாழ்நாளில் 30 ஆண்டுகள் சிறையில் அடைக் கப்பட்டார். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் இவர் ஆற்றிய தொண்டிற்காக இந்தியாவின் மிக உயர்ந்த விருதான "பாரத ரத்னா" விருதும் இவருக்கு வழங்கப்பட்டது.

அன்புவழி, அறவழி ஆகிய காந்திய லட்சியங்களுக்காக இறுதி மூச்சு வரை வாழ்ந்தவர். காந்தியடிகளின் தத்துவங் களுக்கு எடுத்துக் காட்டாக விளங்கியவர். மதங்களின் பெயரால் மக்களைப் பிளவுபடுத்தும் இயக்கங்களை வாழ்நாள் முழுவதும் அவர் எதிர்த்துப் போராடினார். இந்தியா-பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளுக்கும் இடையில் அன்பு வழியிலும், அமைதி வழியி லும் நல்லுறவு நிலவிட அயராது தொண்டாற்றினார்.

பக்தூன் சமூகத்தினருக்கு அவர் ஆற்றிய தன்னலமற்ற தொண்டு காரணமாக அவருக்கு "பாட்ஷாகான்" என்ற பட்டம் வழங்கப்பட்டது. மனித சமுதாயத்தை அழிக்கும் ஆயுதங்களை ஒழித்துவிட வேண்டும் என்பதே திரு. கபார்கான் அவர்கள் உலகுக்கு விடுத்த கடைசிச் செய்தியாகும்.

1988 ஜனவரி 27]

அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும், இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்).

(முற்பகல் 10-10)

2. இரங்கல் தீர்மானம்.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன், முதல் அமைச்சர் அவர்களின் மறைவு குறித்து.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" தமிழகத்தின் நாயகராகவும், உலகெங்கும் வாழுகிற தமிழ் மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாகவும், கலைத்தாயின் தலைமகனாகவும், ஒப்பற்ற மனிதாபிமானியாகவும், உயிருக்கு இறுதி நேருகிறவரை வற்றாது வழங்குகிற ஜீவநதியாகவும், தமிழகத் திரைப்பட வரலாற்றில் திருப்புமுனையாக அமைந்து மாபெரும் சமுதாயப் புரட்சிக்கு வித்திட்டவராகவும், பேரறிஞர் அண்ணாவின் இலட்சியங்களைத் தொடர்ந்து காப்பாற்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்கிற அரசியல்